09.09.2024
அசல் வழக்கு எண்: 180/2019

வா.சா.1 சாட்சி பாண்டி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். எனக்கு பூர்வீகம் என்ன ஊர் என்றால் காமாட்சிபுரம் ஆகும். எனது தகப்பனார் பெயர் என்ன என்றால் வெ.ரெ.வெங்கடசாமி ஆகும். தகப்பனார் என்ன வேலை பார்த்தார் என்றால் விவசாயம் பார்த்தார். 2, 3 வாதிகள் எனது உடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான்.

இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். என்ன மனு கொடுத்தேன் என்றால் பட்டாவில் உள்ள 30 செண்டு தனியாக உடைந்திருந்தது. அதற்காக மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.13 ஆவணம் நான் தாக்கல் செய்த மனு என்றால் சரிதான். மேற்படி மனுவிற்கு என்ன உத்தரவு ஏற்பட்டது என்றால் நீதிமன்றம் மூலமாக பார்த்துகொள்ள சொன்னார்கள். நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு தள்ளுபடி ஆனது என்றால் சரிதான். மேற்படி உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன்.

நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண்.104/17B ஆகும். மேற்படி சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 82 செண்டு ஆகும். மேற்படி சர்வே எண்.104 என்பது 17B என உட்பிரிவு ஆவதற்கு முன்பாக சர்வே எண்.104 ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 47 செண்டு ஆகும்.

இந்த வழக்கை தாக்கல் செய்து 2 ஆண்டுகளுக்கு பிறகு 2, 3 வாதிகள் எனக்கு தாவா சொத்தை பொறுத்து விடுதலை பத்திரம் எழுதிகொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி விடுதலை பத்திரத்தில் தாவா சொத்துபோக மேலும் 5 சொத்துக்கள் சேர்ந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி விடுதலை பத்திரம் 11.01.2021ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விடுதலை பத்திரம் சம்பந்தமாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் சொன்னேன். வழக்கு தாக்கல் செய்த பிறகு எனது சகோதரிகளிடம் விடுதலை பத்திரம் எழுதி வாங்க அவசியம் என்ன என்றால் கிராமநிர்வாக அலுவலரிடம் வரி செலுத்த சென்ற போது எனது பெயரில் பட்டா இருந்தால்தான் ரசீது கொடுப்பதாகவும் எனது சகோதரிகளிடமிருந்து பத்திரம் எழுதி வாங்கினால்தான் எனது பெயரில் பட்டா வழங்குவேன் என்றும் சொன்னதால் எழுதி வாங்கினேன். மேற்படி விபரத்தை எனது வழங்கறிஞரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். எனது வழக்கறிஞரிடம் கலந்து ஆலோசித்துதான் பத்திரம் எழுதி வாங்கினேன் என்றால் சரிதான். கிராமநிர்வாக அலுவலர் அதன் அடிப்படையில் பட்டா வழங்கினாரா என்றால் வழங்கினார். ரசீது போட்டேனா என்றால் ரசீது கொடுத்துள்ளார். அந்த பட்டாவையும், கிஸ்தி ரசீதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பட்டா மற்றும் கிஸ்தி ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. கிராமநிர்வாக அலுவலரிடம் பட்டா பெற்று ரசீது பெற்றுள்ளது பிரதிவாதிகளை

கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எத்தனை செண்டிற்கு பட்டா பெற்றுள்ளேன் என்றால் 52 செண்டிற்கு பட்டா பெற்றுள்ளேன்.

எனது அப்பாவுடைய தகப்பனார் பெயர் என்றால் ரெங்கசாமி ஆகும். அவரை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்தது இல்லை. எனது தாத்தா பெயரில் பட்டா அல்லது ரசீது எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது தாத்தாவுடைய இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அவர் எந்த ஆண்டு இறந்தார் என்றால் தெரியாது. எனது தாத்தா ரெங்கசாமியின் மனைவி பெயர் என்ன என்றால் சுப்பம்மாள் ஆகும். சுப்பம்மாள் பெயரில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி வா.சா.1 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)